**ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 06/2017**

எனது இல : ஓதி/சுற்றறிக்கை/06/2017.
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2017.11.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் / முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்.

**2016.01.01 ஆம் திகதியின் பின்னர் நியமனம் பெற்று பொது மற்றும் மாகாண சபையில் சேவையாற்றும் ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களிடமிருந்து விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பை அறவீடு செய்தல்.**

அரச அலுவலர்களுக்கான புதிய ஓய்வுதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தல் தொடர்பில் நியமனக்கடித்தை மீளாய்வு செய்யும் பொருட்டு போது நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 2017.08.25 ஆம் திகதிய 21/2017 அம் இலக்கச் சுற்றறிக்கை மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அதற்கமைய, 2016.01.01 அம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில், 2016.01.01 அம் திகதியின் பிற்பாடு நியமனம் பெற்ற அரச அலுவலர்களது நியமனக் கடிதங்களின் 06 ஆம் உறுப்புரை பின்வருமாறு திருத்தம் செய்யப்படும்.

**“இந்நியமனம் ஓய்வூதிய உரித்துடையதாகும். எதிர்காலத்தில் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் உரித்துடையவர் அதல் வேண்டும். மெலும், நீங்கள் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பை செலுத்துதல் வேண்டும்”**

03. மேற் கூறப்பட்ட பிரிவின் படி, போது நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2016 அம் இலக்கச் சுற்றறிக்கையின் 12 ஆம் உறுப்புரைக்கமைய விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பு அறவிடப்படுதல் வேண்டும். மேற் கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு அறவீடு, II ஆம் அட்டணையில் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் வகையில் இருத்தல் வேண்டும்.

அரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்கள் - 6%
மூன்றாம் நிலை மற்றும் சிரேஸ்ட நிலை மட்டங்கள் - 7%

04. 2015.04.07 ஆம் திகதிய 06/2015 அம் இலக்கச் ஓய்வுதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் இயங்கலையில் (online) மெற்கொள்வதுடன் 2016.01.01 அம் திகதியின் பிற்பாடு நியமனம் பெற்ற அனைத்து அரச அலுவலர்களும் மேலே கூறப்பட்ட திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

05. இது வரை காலமும் பங்களிப்பு அறவிடப்படாத அலுவலர்களின் பங்களிப்புகள் 2016.01.01 அம் திகதியில் இருந்து அறவிடப்படுவதுடன் அத்தொகை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

06. 2016.01.01 அம் திகதியின் பிற்பாடு நியமனம் பெற்று சேவைக்காலத்தில் மரணமடைந்த அரச அலுவலர்களது விதவைகளுக்கு இவ் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு உரித்தை வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்: 06/2015 அம் இலக்கச் ஓய்வுதியச் சுற்றறிக்கையின் 3 அம் பந்தியின் பிரகாரம்,

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. ஜனாதிபதி செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் – த.த.த
4. செயலாளர் ,பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு – த.த.த
5. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த